ஒரு சிறு இசை வண்ணதாசனின் பன்னிரெண்டாவது சிறுகதைத்தொகுதி. இத்தொகுதியில் 15 சிறுகதைகள் உள்ளன. வண்ணதாசனுக்கே உரித்தான கவிதை அழகியல், தத்துவ உரையாடல்கள் கொண்ட இத்தொகுதியில் மனிதர்களின் அன்பும் உறவும் அதிகமாகப் பேசப்படுகிறது. முதுமையின் வாழ்வைச் சித்தரிக்கும் கதைகள் பலவும் இத்தொகுதியில் உள்ளன. தாமிரபரணி ஆற்றின் நீர்மையுடன், கதைகள் சிலவற்றில் இசை தென்படுகிறது. இச்சிறுகதைத் தொகுப்பிற்குச் சாகித்திய அகாதெமி (2016) விருது கிடைத்துள்ளது

3:02 pm

தமிழுக்கான சாகித்ய அகாதெமி விருது வண்ணதாசனுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

வண்ணதாசனுக்கு சாகித்ய அகாதெமி விருது

அவரது ஒரு சிறு இசை நூலுக்கு இந்த விருது வழங்கப்படுகிறது. வண்ணதாசன் என்ற பெயரில் கதைகளையும் கல்யாண்ஜி என்ற பெயரில் கவிதைகளையும் எழுதி வரும் இவரது இயற்பெயர் சி. கல்யாணசுந்தரம். திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்த இவர், 1962-லிருந்து எழுதி வருகிறார். கலைக்க முடியாத ஒப்பனைகள், ஒளியிலே தெரிவது, உயரப் பறத்தல் கனிவு ஆகியவை இவரது சில சிறுகதைத் தொகுப்புகள். தற்போது விருதை வென்றிருக்கும் ஒரு சிறு இசை நூலை, சந்தியா பதிப்பகம் வெளியிட்டுள்ளது.

பெண்ணின் நிறைவேறாத ஆசை பற்றி மென்மையாக விவரிக்கிறது.

‘ஒரு சிறு இசை’யோடு, ‘தண்டவாளங்களைத் தாண்டுகிறவர்கள்’, ‘தண்ணீருக்கு மேல் தண்ணீருக்குக் கீழ்’ என மொத்தம் 15 சிறுகதைகள் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கிறது. அத்தனை கதைகளிலும் ஏதோ ஒரு வகையில் ஒரு இசையை எழுத்தில் எழுப்பியிருக்கிறார் வண்ணதாசன்.

இந்தச் சிறுகதைகள் குறித்து, எழுத்தாளர் பாவண்ணன் எழுதிய விமர்சனத்தில், இத்தொகுதியில் பதினைந்து சிறுகதைகள் உள்ளன. சமீபத்தில் இவ்வளவு நிறைவான சிறுகதைகளை நான் படித்ததில்லை. தினமும் இசை கேட்பதுபோல தினமும் ஏதேனும் ஒரு சிறுகதையை மீண்டும் மீண்டும் படித்து அசைபோட்டபடி இருக்கிறேன் என்று எழுதியிருந்தார்.

3:12 pm

புனைப்பெயரில் சிறுகதைகளும், கல்யாண்ஜி என்ற புனைப்பெயரில் கவிதைகளும் எழுதுபவரின் இயற்பெயர், சி.கல்யாணசுந்தரம் (S. Kalayanasundaram). இவர் தமிழ்நாடு, திருநெல்வேலியில் பிறந்தவர். இவரது தந்தை இலக்கியவாதி தி. க. சிவசங்கரன் ஆவார்.இவர் தந்தையும் சாகித்ய அகாதமி விருது பெற்றவர்[1]. நவீன தமிழ்ச் சிறுகதை உலகில் மிகுந்த கவனம் பெற்ற எழுத்தாளரான வண்ணதாசன், தீபம் இதழில் எழுதத் துவங்கியவர். 1962 ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை தொடர்ந்து சிறுகதைகள் எழுதி வருகிறார். இவரது 'ஒரு சிறு இசை' என்ற சிறுகதை நூலுக்காக இந்திய அரசின் 2016 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதமி விருது கிடைத்தது.[2]

வண்ணதாசன் 3:18 pm

இல்லை. கேட்டிருந்தால் மூக்கம்மா ஆச்சி அதை விட்டுவிட்டு வேறு ஏதாவது ஒரு கதை சொல்லியிருக்கக் கூடும். உதாரணத்திற்கு தொடையில் வண்டு துளைக்கிற கர்ணன் கதையை அவள் எம்.ஜி.ஆர் படக் கதையாக மாற்றி விடுவாள்.

மூக்கம்மா ஆச்சிக்கு எம்.ஜி.ஆர் படங்களைப் பிடித்திருந்தது. என்ன, மலைக்கள்ளன் கதையில் பாதியையும் தாய்க்குப் பின் தாரம் கதையையும் சேர்த்துவிடுவாள். மர்மயோகி கதையையும் மகாதேவி கதையையும் அப்படித்தான். யாராவது, 'என்ன ஆச்சி? எல்லாக் கதையையும் இப்படி குழப்புதீங்க?' என்று கேட்டால், 'எல்லாக் கதையும் ஒரே கதை தான். ஆதியிலே இருந்து ஒரு கதையைத் தான் ஒம்பது கதையா சொல்லிக்கிட்டு இருக்கோம் திலுப்பித் திலுப்பி' என்று கேள்வி கேட்கிறவனின் கன்னத்தை, தோசைக்கு அரைத்துக் கொண்டிருந்த மாவுக் கையால் தொடுவாள். எல்லோருக்கும் அவனைப் பார்த்தால் சிரிப்பு வந்துவிடும்.

மூக்கம்மா ஆச்சியைப் பார்த்தால் ஒரு வித்தியாசமும் தெரிய வில்லை. படுத்துத் தூங்குவது போலத்தான் இருக்கிறது. யாராவது தூங்கும் போது சிரிப்பார்களா? பச்சைப் பிள்ளை வேண்டுமானால் சிரிக்கும். ஒரு பல் கூட இல்லாமல், மேல் உதடும் கீழ் உதடும் சுருங்கி, ஈறுக்கு மேல் உள்மடங்கி, ஆச்சியும் பச்சைப் பிள்ளை மாதிரி தான் இருக்கிறாள்.

நாங்கள் பார்க்க, முதலில் இருந்தே ஆச்சிக்குப் பொக்கு வாய் தான். ஏன் உனக்கு ஒரு பல் கூட இல்லாமல் விழுந்துட்டுது ஆச்சி? என்று கேட்டால், முதலில் ஒரு சிரிப்புச் சிரிப்பாள். 'அந்தக் கதைய ஏன் கேட்கே போ' என்று ஆரம்பிப்பாள். 'கோமு, யானை என்ன எல்லாம் சாப்பிடும்னு உனக்குத் தெரியுமா?' என்று தலை பின்னிய படி அக்காவிடம் கேட்பாள். 'ஓலை' என்று அவள் சொன்னால், 'உனக்குத் தெரிஞ்சது அவ்வளவு தான்' என்று ஆச்சி கொஞ்ச நேரம் அப்படியே இருப்பாள்.

'ஒரு நாள் ராத்திரி ஆடிச் செவ்வாய்க்கு அவ்வையார் விரதக் கொழுக்கட்டை செஞ்சு வச்சிருந்தேன். இது எப்படியோ அந்த யானைக்கு வாசம் அடிச்சுட்டு. அப்படியே பாவனாசம் மலையிலே இருந்து பறந்து வருது. ரெண்டு முழத்துக்குக் கொம்பை நீட்டிக் கிட்டு, சுளவு மாதிரிக் காதை ஆட்டிக்கிட்டு அது வாரதைப் பார்த்து தொழுவுல நிக்கித பசுமாடு கண்ணுக்குட்டி எல்லாம் பதறிச் சத்தம் போட்டிருக்கு. நான் நல்லா அசந்து தூங்கிட்டேன். அது என்னடா'ன்னா ஜன்னல் வழியா தும்பிக்கையை நீட்டி என்னை எழு[illegible]ணு

https://vannathasan.files.wordpress